# நீங்கள் நுண்ணுயிர்கொல்லிகளை அவதானமாக கையாளுவதை உறுதி செய்யுங்கள்.

மருந்துகள் தாயாரிப்பு தொழில்துறையாளர்கள்

மனிதர்களிலும் விலங்குகளிலும் தொற்றுக்களைக் கட்டுப்படுத்தவும் சிகிச்சையளிக்கவும் நுண்ணுயிர் கொல்லிகள் அத்தியாவசியமான மருந்துப்பொருட்களாகும்.

தற்போது இவை தாக்குத்திறனை விரைவாக இழந்து வருகின்றன.

- இம்மருந்துப்பொருட்கள் அளவுக்கதிகமாகவும் தவறான முறையிலும் பயன்படுத்தப்படுவதால் நோய்க்கிருமிகள் குறித்த நுண்ணுயிர் கொல்லிகளுக்கெதிராக எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் அபாயம் ஏற்படுகின்றது. இவ்வாறு எதிர்ப்பு சக்தி பெற்றுக்கொள்ளப்பட்டால் நோய்க்கிருமிகளுக்கு எதிராக நுண்ணுயிர்கொல்லிகள் தொழிற்பட முடியாததால் அவற்றினை சிகிச்சைக்காக பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகின்றது. இந்நிகழ்வு 'நுண்ணுயிர்கொல்லி எதிர்ப்புசக்தி' (AMR) எனப்படும்.
- AMR மனிதன் மற்றும் சகல தரைவாழ், நீர்வாழ் விலங்குகளின் சுகாதாரத்துக்கும் பொதுநலத்துக்கும் ஓர் அச்சுறுத்தலாகும். அத்துடன் அதிகரித்துக்கொண்டிருக்கும் நுண்ணுயிர்கொல்லி எதிர்ப்புசக்திக்கு (AMR) ஈடுகொடுக்கும் வகையில் புதிய நுண்ணுயிர்கொல்லிகள் கண்டுபிடிக்கப்படுவதில்லை.
- ஆகையால் பாவனையிலுள்ள நுண்ணுயிர்கொல்லிகளையும் அவற்றின் வினைத்திறனையும் பாதுகாப்பது அத்தியாவசியமானது. இந்த விலைமதிப்பற்ற மருந்துகளை பொறுப்புடனும் துல்லியமான அளவிலும் பயன்படுத்தி மனிதர்களினதும் விலங்குகளினதும் சுகாதாரத்தினையும் பொதுநலத்தினையும் பேணுவதற்கு உதவுக.

> “ அனைவருக்கும் பங்குள்ளது.
> மருந்து தயாரிப்பு தொழில்துறை உதவ முடியும். ”

## நீங்கள் எமக்குத் தேவை



- நுண்ணுயிர்கொல்லிகள் வினைத்திறனையும் கிடைக்கும் தன்மையையும் பாதுகாக்க விலங்குகளில் பொறுப்பானதும் துல்லியமானதுமான நுண்ணுயிர்கொல்லிகளின் பாவனை உறுதிப்படுத்தப்படவேண்டும்.
- நுண்ணுயிர்கொல்லிகளுக்கு எதிரான நோய்க்கிருமிகளின் எதிர்ப்புச் சக்தியை பொருத்தமான முறையில் கையாளுவது உலக விலங்கு சுகாதார நிறுவனத்தின் (OIE) முதன்மையான நோக்கமாகும்.
- விலங்கு மருந்து தயாரிப்புத்துறை உள்ளடங்கலாக விலங்கு சுகாதாரத்தின் பங்களிப்பாளர்கள் அனைவராலும் நுண்ணுயிர்கொல்லிகளை அவதானமாக கையாளுவதை உறுதிப்படுத்தல் மனித, விலங்கு சுகாதாரத்துக்கும், நலனுக்கும் அத்தியாவசியமான பொறுப்பாகும். நுண்ணுயிர்கொல்லிகளின் பாவனையை இந்த சர்வதேச நியமங்களினூடாக OIE) பரிந்துரைக்கின்றது.
- இத்துறையில் தங்கள் நிபுணத்துவத்தினை வெளிப்படுத்துவதுடன் உங்களது தலைமைத்துவத்தினையும் ஒத்துழைப்பினையும் வழங்குதல் வேண்டும்.



@ மேலதிக விபரங்களுக்கு: www.oie-antimicrobial.com

# மருந்துற்பத்தி தொழில்துறையாளர்களே!
# நீங்களே வாயிற்காப்பாளர்கள்!

மருந்துகள் தயாரிப்பு தொழில்துறையாளர்கள்

- நுண்ணுயிர்கொல்லிகளுக்கெதிராக எதிர்ப்பு சக்தியைக் கொண்ட நோய்க்கிருமிகளை பொருத்தமான முறையில் கையாளுவது உலக விலங்கு சுகாதார நிறுவனத்தின் (OIE) முன்னிலைப்படுத்தப்பட்ட ஒரு நோக்கமாகும். எனவே OIE அறிமுகப்படுத்தியுள்ள சர்வதேச நியமங்களை பின்பற்றி நுண்ணுயிர்கொல்லிகளின் தொற்றுக்களுக்கெதிராக போராடும் தன்மையினை பாதுகாக்க உதவுக.
- இத்துறையில் தங்கள் நிபுணத்துவத்தினை வெளிப்படுத்துவதுடன் உங்களது தலைமைத்துவத்தினையும் ஒத்துழைப்பினையும் வழங்குதல் வேண்டும்.

## மருந்துற்பத்தி தொழில் துறையானது:

சிறந்த உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதுகாப்பான வினைத்திறன்மிக்க தரமான நுண்ணுயிர்கொல்லிகள் உற்பத்தியாவதை உறுதிப்படுத்தவேண்டும்.

1. தயாரிக்கும் நுண்ணுயிர்கொல்லிகளின் பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் தரம் என்பனவற்றை உறுதிப்படுத்துவதுடன் சிறந்த உற்பத்தி நடைமுறைகளை கடைபிடித்தல் வேண்டும்.
2. விற்பனை அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதுடன் விளம்பர விதிகளுக்கிணங்க நுண்ணுயிர் கொல்லிகள் கொண்ட மிருகவைத்திய பொருட்களை நேரடியாக விளம்பரப்படுத்தல் ஆகாது.
3. ஏற்றுமதி செய்வதிலும் நுண்ணுயிர் கொல்லிகள் கொண்ட மிருகவைத்திய மருந்துப்பொருட்களை சந்தைப் படுத்துவதிலும் உத்தியோகபூர்வமாக அனுமதி பெற்ற விநியோக முறைகளை மாத்திரமே பயன்படுத்த வேண்டும்.
4. நுண்ணுயிர்கொல்லி எதிர்ப்புசக்தியையும் அபாயத்தினையும் நுண்ணுயிர் கொல்லிகளை வழங்கும்போது பொறுப்பான பாவனைக்குரிய தேவையினையும் சுட்டிக்காட்ட வேண்டும்.
5. விற்பனை மற்றும் விநியோகம் சம்பந்தமான தரவுகளையும் தகவல்களையும் பரிமாறி நுண்ணுயிர்கொல்லி பாவனையையும் நுண்ணுயிர்கொல்லி எதிர்ப்புச்சக்தி மதிப்பீட்டையும் கண்கானிக்க இணங்கி ஒத்துழைக்கவும்.
6. நுண்ணுயிர்கொல்லிகளின் பாவனை பற்றிய பயிற்சிகளில் பங்கெடுக்கவும்.
7. நுண்ணுயிர்கொல்லி எதிர்ப்புசக்திக்கு எதிரான ஆராய்ச்சிகளுக்கு பங்களிப்பதுடன் நுண்ணுயிர் கொல்லி மாற்றீடுகளுக்கான தடுப்பு மருந்து விரைவானதும், மலிவானதுமான நோய்கண்டறியும் சோதனைகளையும் உருவாக்குவதற்கு முன்னுரிமை கொடுக்கவும் கவனமெடுக்கவும் வேண்டும்.






Funded by
UK Government

WORLD ORGANISATION FOR ANIMAL HEALTH
*Protecting animals, preserving our future*